பெறுநர்.                                                                    24.06.2017

மரியாதைக்குரிய
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும்
பகிர்மானக்கழகம்,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : தமிழ்நாடு மின்வாரியம் 60-வது ஆண்டு வைரவிழா- தொழிலாளர்கள் மற்றும அலுவலர்களுக்கு சிறப்பு ஆண்டுயர்வு, ஓய்வூதியர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கிடக்கோருதல்.

1.7.1957-ல் துவங்கப்பட்ட தமிழ்நாடு மின்சாரவாரியம் 60 ஆண்டுகள் நிறைவுற்று 1.7.2017-ல் வைரவிழா கொண்டாடவிருக்கிறது.

இந்த 60 ஆண்டு இடைவெளியில் மின்உற்பத்தி, கொண்டு செல்லுதல், மின்விநியோகம் ஆகிய முப்பரிமாணங்களிலும் பிரம்மாண்டமான வளர்ச்சியினை நாம் பெற்றிருக்கிறோம்.

ஒரு காலத்தில் மின்சாரம் வந்தால் ஆச்சரியம் என்று பட்டிமன்றங்களிலும், தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கிண்டலடிக்கப்பட்ட மின்சாரவாரியம், நஷ்டத்தை ஒப்பிடுவதற்காக வெள்ளையானை என்று வர்ணிக்கப்பட்ட மின்சாரவாரியம், இன்றைக்கு மின்வெட்டே இல்லை, அபரிமிதமான மின்சாரம் லாபத்தை நோக்கி பீடு நடை என்று புதிய வரலாற்றை தமிழக மின்சாரவாரியம், தங்கள் சீரியத் தலைமையில் தொழிலாளர், அலுவலர் ஒத்துழைப்புடன் படைத்திருப்பது ஒரு நிதர்சனமான உண்மை.

தமிழக அரசின் சமூகப் பொருளாதார கொள்கையை நிறைவேற்றுவதற்கும், மக்கள் நலம் காக்கும் அரசாக செயல் படுவதற்கும், லட்சக்கணக்கான விவாசாயிகளுக்கு, குடிசைகளுக்கு, வீடுகளுக்கு இலவசமாகவும், சகாய விலையிலும் கொடுத்தப் பிறகும், நமது மின்சாரவாரியம் நட்டக்கணக்கைத் தாண்டி லாபத்தை நோக்கி செயல்பட்டு வருவதற்கு தாங்கள் அனைத்து தொழிலாளர்களையும், அலுவலர்களையும் பாராட்டி முதல் கடிதம் 20.5.2017-ல் எழுதியிருப்பதற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

2015 மற்றும் 2016-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், சூறாவளிக்காற்று, மழை, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மின்தடங்களை குறுகிய காலத்தில் எல்லோரும் வியப்புடன் பாராட்டும் வகையில் மின் தடங்களைச் சரி செய்து பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்கியது தொழிலாளர்கள், அலுவலர்களின் வரலாற்றுச் சாதனையாகும். இத்தகைய அர்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வரும் தொழிலாளர்கள், அலுவலர்களுக்கு 2 ஆண்டு சிறப்புயர்வும், ஏற்கனவே மின்வாரியத்தில் பணியாற்றி தற்போது ஓய்வூதியம் பெறுவோருக்கு 2000-ரூபாய் வெகுமதியும் 60-வது ஆண்டு வைர விழாவை முன்னிட்டு வழங்கிடுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள



பொதுச்செயலாளர்

நகல்.

வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள் மற்றும்
மத்தியசங்கப்பொறுப்பாளர்கள்.